## <u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 73/2015 | வா.சா. | : 1 |
| பெயர் | : அறிவழகன் | த/பெ. | : சுப்பிரமணி |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : நத்தம் கோவில்பட்டி |
| தேதி | : 08.09.2023 | வயது | : 54 /2022 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 12.11 P.M. – 12.18P.M.

<u>வாதி தரப்பில் முதல் விசாரணை</u>

1) நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை எனக்கு படித்து பார்த்து அதில் நான் கையெழுத்து செய்தேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொண்டு அதில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

வா.சா.ஆ.1 – 25.11.2022 தேதியிட்ட வழக்கு 2வது இலக்கச் சொத்துக்களுக்கான பட்டடா – அசல் (3 எண்ணிக்கை)

வா.சா.ஆ.2 – வழக்குரை வரைபடம்.

வா.சா.ஆ.3 – 16.07.2015 தேதியில் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு வாதி கொடுத்த புகார் மனு – அலுவலக நகல்.

நீ.ம.சா.ஆ–1 – 05.12.2018 தேதியிட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை.

நீ.ம.சா.ஆ–2 – 05.12.2018 தேதியிட்ட நீதிமன்ற ஆணையர் வரைபடம்.

மேற்படி ஆவணங்கள் வா.சா.ஆ.1 முதல் 3, நீ.ம.சா.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்கண்ட எனது தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை ஏற்றுக்கொண்டு வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 08.09.2023 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 73/2015 | வா.சா. | : 1 |
| பெயர் | : அறிவழகன் | த/பெ. | : சுப்பிரமணி |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : நத்தம் கோவில்பட்டி |
| தேதி | : 27.11.2023 | வயது | : 54 /2023 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**<u>சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 01.23 P.M. – 1:32 P.M.</u>**

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3) எனது பூர்வீக ஊர் நத்தம், கோவில்பட்டி ஆகும். நான் பிறந்தது முதல் வழக்கு சொத்தில்தான் குடியிருந்து வருகிறேன். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை எப்போது வாங்கினார் என்றால் 1985ல் வாங்கினார். அப்போதிருந்தே அதில் குடியிருந்து வருகிறார். நத்தம், கோவில்பட்டி 1ம் பிரதிவாதியின் பூர்வீக ஊரா என்றால் இல்லை. வழக்கு சொத்து எனக்கு பூர்வீக பாத்தியப்பட்டதா, அல்லது சுய சம்பாத்திய சொத்தா என்றால் பூர்வீக பாத்தியப்பட்டதாகும். வழக்கு சொத்தில் எத்தனை புல எண்கள் உள்ளது என்றால் புல எண்கள் 531/33, 34, 35, 36 ஆகியவை உள்ளது. அதன் பரப்பளவு தெரியுமா என்றால் புல எண்.531/33ல் 3 ஏர்ஸ் நிலமும், 531/34ல் 0.9 ஏர்ஸ் நிலமும், 531/35ல் 0.3 ஏர்ஸ் நிலமும், 531/36ல் 01.30 ஏர்ஸ் நிலமும் உள்ளது.

4) வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் சொல்ல முடியுமா என்றால் முடியும், 531/33, 34, 35 ஆகியவற்றிற்கு ஒரே நான்கு எல்லைதான், அவை தென்புறம் 1ம் பிரதிவாதி வேலாயுதம் வீடு, கீழ்புறம் நெடுஞ்சாலை துறையின் இடம், வடபுறம் சண்முகம் வீடு மற்றும் காலியிடம், மேல்புறம் எனது பங்காளி வகையரா பேரில் உள்ள காலியிடம் உள்ளது. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 2015 வரை எனது சொந்த வேலையின் காரணமாக வெளியில் சென்றிருந்ததாக

சொல்லியுள்ளேன், அவ்வாறெனில் 2015 வரை நான் நத்தம் கோவில்பட்டியில் குடியிருக்கவில்லை என்று சொன்னால் சரியா என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 1985 முதல் இவ்வழக்கு தாக்கல் செய்த 2015 வரை எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை என்றால் சரி.

5) நான் வழக்கு தாக்கல் செய்த போது என்ன ஆவணங்கள் தாக்கல் செய்தேன் என்றால், எனது இடத்திற்கான பட்டா, ஆக்கிரமிப்பை காட்டக்கூடிய உத்தேச வரைபடம் ஆகியவை தாக்கல் செய்தேன். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனது இடத்தை அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. உத்தேச வரைபடத்தை புல வரைபடத்துடன் ஒப்பீடு செய்து பார்த்த பிறகு தயார் செய்து தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். உத்தேச வரைபடத்துடன் புல வரைபடத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 2018 ல் நீதிமன்ற ஆணையர் மூலம் வழக்கு சொத்து அளவிடப்பட்டது என்றால் சரி.

6) அப்போது நீதிமன்ற ஆணையரிடம் புல வரைபடத்தை காண்பித்து ஒப்பிட்டு பார்த்து வரைபடம் தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் புல வரைபடமும் சேர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.71/2015, 73/2015 வழக்குகளில் 1ம் பிரதிவாதி எவ்வளவு அளவுள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று தெரிவித்துள்ளேனா என்றால் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட பிறகுதான் ஆக்கிரமிப்பின் அளவு பற்றி எனக்கு தெரியும். நான் 2015 ல் யூகத்தின் அடிப்படையில்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை, ஆக்கிரமிப்பு இருந்ததால்தான் தாக்கல் செய்தேன்.

7) அ.வ.எண்.71/2015 வழக்கில் நான் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், எனக்கும், எனது பங்காளிகள் வகையராவிற்கும் வழக்கு சொத்தான பட்டா பாதையில் 1ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லை என்று விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேன். அ.வ.எண்.73/2015 வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் 1ம் பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியை அகற்றித் தர வேண்டி பரிகாரம் கேட்டுள்ளேன். 2018ல் 1ம் பிரதிவாதி பொதுப்பாதையை ஆக்கிரமித்து சுவர் எழுப்பியிருப்பதாக 2 முதல் 4 பிரதிவாதிகளிடம் மனு கொடுத்தேனா என்றால் வழக்கிற்கு முன்பாக கொடுத்துள்ளேன்.

8) நான் கொடுத்த மனுவின் பேரில் வருவாய்துறையினர் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி என் மீதும், 2 முதல் 4 பிரதிவாதிகள் மீதும் தாக்கல் செய்த அ.வ.எண்.81/2015 வழக்கு பற்றி தெரியுமா என்றால் அது எனக்கு எதிராக தாக்கல் செய்யப்படவில்லை. நான் கொடுத்த புகாரின் பேரில் 2 முதல் 4 பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதியின் இடத்திற்குள் உள்ள சுவற்றை இடிக்கக்கூடாது என்பதற்காக அவர் தாக்கல் செய்த வழக்குதான் அ.வ.எண்.81/2015 என்றால் அதைப்பற்றி தெரியாது. அந்த வழக்கு நிலுவையில் இருந்தபோதே, 2 முதல் 4 பிரதிவாதிகள் பிரச்சனைக்குரிய சுவற்றை இடித்து அப்புறப்படுத்தியது தெரியுமா என்றால் தெரியும்.

9) 1ம் பிரதிவாதி பொதுப்பாதையில் வணிக வளாகம் கட்ட முயற்சிப்பதாக சொல்லியுள்ளேன், அவ்வாறு அவர் கட்டிடம் கட்டிவிட்டாரா என்றால் கட்டிவிட்டார். அந்த கட்டிடத்தை அவர் என்ன பயன்பாட்டிற்காக வைத்துள்ளார் என்றால் அதில் பாதியை நெடுஞ்சாலைத்துறையினர் அகற்றிவிட்டனர், மீதமுள்ள கட்டிம் உள்ளது. மீதமுள்ள கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா என்றால் பயன்பாட்டில்தான் உள்ளது. நான் அ.வ.எண்.73/2015 வழக்கிலும், எனது நிரூபண வாக்குமூலத்திலும் 16.03.2015 அன்று நத்தம் காவல் நிலையத்தில்

புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் புகார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை. எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் முன் பகை உள்ளதா என்றால் இல்லை.

2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 27.11.2023 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 73/2015 | வா.சா. | : 1 |
| பெயர் | : அறிவழகன் | த/பெ. | : சுப்பிரமணி |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : நத்தம் கோவில்பட்டி |
| தேதி | : 19.06.2024 | வயது | : 54 /2024 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 11.52 A.M. – 11.54 A.M.

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

10) நத்தம் வட்டம், நத்தம் சப்டி, புல எண்.212/12 ல் உள்ள நிலம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி. மேற்படி புல எண்.212/12 நத்தம் நிலவரித்திட்டத்தில் GR புல எண்.531 ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. புல எண்.531 ல் வீட்டுமனைகள் பிரிக்கப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரி. GR புல எண்.531/36 ல் பாதை உள்ளதென்றால் ஆமாம். அந்தப் பாதையில் தான் நானும், மற்ற வீட்டுமனைதாரர்களும் நடந்து செல்லமுடியும் என்றால் ஆமாம். அந்த பாதையின் அளவு கிழக்குப் பக்கம் தென்வடல் 4.8 மீட்டர் அளவில் உள்ளது என்றால் சரி.

11) அந்த பாதைக்கு தெற்குப்பக்கம் 1ம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் ஆமாம். அந்த வீடு GR புல எண்.532/13 ல் உள்ளது என்றால் சரி. 1ம் பிரதிவாதி கிழக்குப் பக்கம் வியாபாரத்திற்கு கடைகள் கட்டியுள்ளார்கள் என்றால் ஆமாம். அந்த கடையின் வடக்குப் பக்கம் GR புல எண்.531/36 ல் உள்ளது என்றால் சரி. GR புல எண்.531/36 ல் உள்ள பாதையில் தென்புறம் 5 அடிக்கு 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கடைகள் கட்டியுள்ளார் என்றால் ஆமாம். நான் இவ்வழக்கை 1ம் பிரதிவாதிக்கு எதிராகத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம்.

12) நான் 1ம் பிரதிவாதிக்கு எதிராகத்தான் வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் ஆமாம். 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பை அகற்ற தவறினால் 2 முதல் 5 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்று

நான் கேட்டுள்ள செயலுறுத்துக் க ட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல் ல என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 19.06.2024 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 73/2015 | வா.சா. | : 2 |
| பெயர் | : அசோக்குமார் | த/பெ. | : சுப்பிரமணியன் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : நத்தம் கோவில்பட்டி |
| தேதி | : 12.08.2024 | வயது | : 50 /2024 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 12. 46 P.M. – 12.47 P.M.

**வாதி தரப்பில் முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2 வது சாட்சியாவேன். இவ்வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகளை தெரியும். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றிய

விவரம் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை எனக்கு படித்து பார்த்து அதில் நான் கையெழுத்து செய்தேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொண்டு அதில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 12.08.2024 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 71/2015 | வா.சா. | : 2 |
| பெயர் | : அசோக்குமார் | த/பெ. | : சுப்பிரமணியன் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : நத்தம் கோவில்பட்டி |
| தேதி | : 21.08.2024 | வயது | : 50 /2024 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 12.19 P.M. – 12.25 P.M.

**<u>வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

2) நான் ஏற்கனவே எனது பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளேன். தற்போது எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவற்றை வாதி தரப்பு சாட்சி சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

சா.சா.ஆ.1 – வா.சா.2ன் ஆதார் அடையாள அட்டை – அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது.

சா.சா.ஆ.2 –21.08.2015 தேதியிட்ட நத்தம் கிராம புல எண்.531ன் புல வரைபடம் – உண்மை நகல்.

சா.சா.ஆ.3 – 12.08.2024 தேதியிட்ட வா.சா.2 பெயரிலுள்ள பட்டா – இணைய நகல் (பட்டா எண்,. 303)

சா.சா.ஆ.4 – 12.08.2024 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள பட்டா – இணைய நகல் (பட்டா எண்.704)

**மேற்கண்ட ஆவணங்கள் சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.4 வரை குறியீடு செய்யப்படுகிறது**

**1ம் பிரதிவாதி மற்றும் அவரது தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் . 2 முதல் 4 பிரதிவாதிகளுக்காக அரசு வழக்கறிஞர் ஆஜர்.**

<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

3) பழைய புல எண்.212/12 வாதிக்கு சொந்தமான பட்டா இடம் என்றால் சரி. நத்தம் நிலவரித்திட்டத்தின்போது பழைய புல எண். 212/12, புதிய புல எண். 531 ஆக மாற்றப்பட்டுள்ளது என்றால் சரி. புல எண். 531ல் வீடுகள் கட்டுவதற்கு வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரி. புல எண்.531/36 என்று ஒரு புல எண்,531 ல் உள்ளது என்றால் சரி. புல எண். 531/36 பாதையாக உள்ளது என்றால் ஆமாம். புல எண்.531/36 ல் உள்ள பாதை வழியாக தான் வாதி புல எண்.531/33ல் உள்ள அவரது வீட்டிற்கு செல்லமுடியும் என்றால் ஆமாம். மற்ற நபர்களும் அந்த பாதை வழியாகத்தான் செல்லவேண்டும்

என்றால் பட்டாவிலுள்ள நாங்கள் மட்டும் அதில் செல்வோம்.

4) அந்த பாதையின் கிழக்குப்பக்கம் தென்வடல் அளவு 4.8 மீட்டர் என்றால் சரி. பாதையின் தெற்கு பக்கம் 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான வேலாயுதம் வீடு உள்ளது என்றால் ஆமாம். அந்த வீடு புல எண்.532/13 ல் உள்ளது என்றால் சரி. 1ம் பிரதிவாதி அவரது வீட்டிற்கு கிழக்குப்பக்கம் வணிக ரீதியிலான கடைகள் கட்டியுள்ளார் என்றால் ஆமாம். அந்த கடைகளின் வடக்குப்பக்கம் வாதிக்கு சொந்தமான பட்டா பாதையில் புல எண்.531/36 ல் சுமார் 5 அடி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த வழக்கு எங்களுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையேயான வழக்கு என்பதால் 2 முதல் 4 பிரதிவாதிகள் இவ்வழக்கில் அவசியமற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிரான இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்குஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 21.08.2024 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர்,

நத்தம்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 73/2015 | வா.சா. | : 2 |
| பெயர் | : அசோக்குமார் | த/பெ. | : சுப்பிரமணியன் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : நத்தம் கோவில்பட்டி |
| தேதி | : 21.10.2024 | வயது | : 50 /2024 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

5) வழக்கில் அறிவழகனுக்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். அறிவழகன் என் உடன்பிறந்த அண்ணன் ஆவார். வழக்கின் விபரங்கள் எனக்கு முழுமையாக தெரியுமா என்றால் தெரியும். அ.வ.எண்.73/2015 ல் என்ன பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தை எடுத்துக்கொடுக்கும்படி கோரப்பட்டுள்ளது. யாருடைய இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால், எனக்கும், என் பங்காளிகளுக்கும் பாத்தியப்பட்ட பட்டா பாதையை வேலாயுதம் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். நான் வாதியா, சாட்சியா என்றால் சாட்சி. நான் சாட்சியாக இருந்து கொண்டு பரிகாரம் கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல.

6) இரண்டு வழக்குகளிலும் குறிப்பிடும் சொத்து ஒரே சொத்தா அல்லது வெவ்வேறு சொத்தா என்றால் ஒரே சொத்து. பிராதில் குறிப்பிடப்படாத விபரத்தை நான் நிரூபண வாக்குமூலத்தில் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சா.சா.ஆ.3 எனது பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான். இந்த பட்டா 12.08.2024ம் தேதி இணையவழியில் பெறப்பட்டது. இந்த ஆவணம் 19.10.2023 அன்று 15.24 மணிக்கு வட்டாட்சியரால் கையொப்பமிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் நத்தம் பட்டா என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நத்தம் பட்டா என்றால் என்ன என்றால் எனக்கு தெரியாது.

7) தாவாச் சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். பூர்வீக சொத்து சம்பந்தமாக வேறு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மூலப்பத்திரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் நிரூபண வாக்குமூலத்தில் வழக்குச் சொத்தை அரசு புறம்போக்கு இல்லை என குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். நத்தம் பட்டா சொந்த வீடு இல்லாதவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் பட்டா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. வழக்கு நிலுவையிலிருக்கும்போது சட்டவிரோதமாக பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே நான் பட்டா வாங்கிவிட்டேனா என்றால் வாங்கிவிட்டேன். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும்.

8) நீதிமன்ற ஆணையர் சர்வே எண்.212/15 சொத்தை ஆய்வு செய்யாமல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சர்வே எண்.212/15 பழைய புல எண் ஆகும். தற்போது அது சர்வே எண்.532/13 என ஆகிவிட்டது. அதனால் வேலாயுதம் அளக்கக்கூடாது என சொன்னார், சர்வேயரும் தங்களிடம் சர்வே எண்.212/15 குறித்த ஆவணங்கள் இல்லை என்றும் கூறியதால் ஆணையர் அதை அளக்கவில்லை. சர்வே எண்.212/15 ஐ அளக்கவேண்டும் என 1ம் பிரதிவாதி வேலாயுதம் நான்கு முறை அளக்கவேண்டும் என நீதிமன்ற ஆணையரிடம் மெமோ கொடுத்தார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சர்வே எண்.212/15 அளக்காததற்கு காரணம் குறிப்பிடவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

9) 1ம் பிரதிவாதி வேலாயுதம் தனது மனைவிடமிருந்து சர்வே எண்.212/15 ஐ கிரையமாக பதிவு ஆவணம் மூலமாக பெற்றவிபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி வழக்குச் சொத்தை பூர்வீகச் சொத்து என கூறிவிட்டு நத்தம் பட்டாவை பெற்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் போலியாக பெற்ற பட்டாவை வைத்து நிரூபண வாக்குமூலத்தில் பொய்யான தகவல்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. உயர்நீதிமன்றம் 1ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.212/15ல் 3888 சதுரடி என பட்டாவை திருத்திக்கொடுக்கும்படி மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிட்டுள்ள விபரம் எனக்கு தெரியும். இந்த உத்தரவிற்கு பின்னிட்டு நான் நத்தம் பட்டா பெற்றுள்ளேன் என்றால் நான் இணையதளத்திலிருந்து நகல் எடுத்தேன், பட்டா கேட்டு மனு கொடுக்கவில்லை. நான் தவறான தகவல்களை சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 21.10.2024 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர்,
நத்தம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்**

| | |
|---|---|
| அ.வ.எண். 73/2015 | பி.வா.சா. 1 |

| | |
|---|---|
| பெயர் : வேலாயுதம் | த/பெ. ரத்தினம் |
| தாலுகா : நத்தம் | நத்தம் கோவில்பட்டி |
| தேதி : 13.12.2024 | வயது : 71/2024 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 12.23 P.M. – 12.30 P.M.

<u>பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை</u>

1. நான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பில் முதல் சாட்சியாவேன். எனக்கு இவ்வழக்கு பற்றிய விவரங்கள் நன்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை எனக்கு படித்து காண்பித்த பிறகு அதில் கையெழுத்து செய்தேன். என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 13.03.1925ம் தேதியிட்ட அருணாச்சலம் பிள்ளை என்பவருக்கு, ஆரியமாலா அம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் (ஆவண எண்.244/1925) சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ.1 ஆகவும்,

2) 04.04.1951ம் தேதியிட்ட வீரம்மாள் என்பவர், சீனியாபிள்ளை மனைவிகள் பொன்னம்மாள் மற்றும் பாப்பம்மாள் ஆகியோருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் (ஆவண எண்.568/1951) சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ.2 ஆகவும்,

3) 13.05.1953ம் தேதியிட்ட சீனியாபிள்ளை, அவரது 3 வது மனைவி சுந்தரவள்ளி என்பவருக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் (ஆவண

எண்.989/1953) சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ.3 ஆகவும்,

4) 13.10.1970ம் தேதியிட்ட சீனியாபிள்ளை, அவரது 3 வது மனைவி சுந்தரவள்ளி என்பவருக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட்டை ரத்து செய்த ஆவணம் (ஆவண எண்.2213/1970) சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ.4 ஆகவும்,

5) 18.01.1974ம் தேதியிட்ட சீனியாபிள்ளை, ஜெயபிரகாஷ் என்பவருக்கு எழுதி வைத்த பதிவு பெற்ற உயில் ஆவணம் (ஆவண எண்.2/1974) சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ.5 ஆகவும்,

6) 18.01.1974ம் தேதியிட்ட பொன்னம்மாள் என்பவர் ஜெயபிரகாஷ் என்பவருக்கு எழுதி வைத்த பதிவு பெற்ற உயில் ஆவணம் (ஆவண எண்.1/1974) சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ.6 ஆகவும்,

7) 22.03.1982ம் தேதியிட்ட ஜெயபிரகாஷ் என்பவர், சுப்பிரமணியன் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் (ஆவண எண்.411/1982) சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ.7 ஆகவும்,

8) 01.12.1983ம் தேதியிட்ட சுந்தரவள்ளி மற்றும் அவரது வாரிசுகள், சுப்பிரமணியன் என்பவருக்கு எழுதி கொடுத்த பாகப்பாத்திய விடுதலை ஆவணம் (ஆவண எண்.1620/1983) சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ.8 ஆகவும்,

9) 31.03.1984ம் தேதியிட்ட சுப்பிரமணியன் என்பவர், 1ம் பிரதிவாதியின் மனைவி வளர்மதி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் (ஆவண எண்.345/1984) சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ.9 ஆகவும்,

10) 31.05.1985ம் தேதியிட்ட என் மனைவி வளர்மதி என்பவரிடமிருந்து, 1ம் பிரதிவாதியாகிய என் பெயரில் பெறப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம்

(ஆவண எண்.617/1985) சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ.10 ஆகவும்,

11) 28.12.1991ம் தேதியிட்ட நத்தம் நிலவரித்திட்ட தனிவட்டாட்சியருக்கு பட்டா தொடர்பாக அளித்த மனு – கை நகல் – பி.வா.சா.ஆ.11 ஆகவும், (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

12) 22.02.1993ம் தேதியிட்ட நத்தம் வட்டாட்சியருக்கு, பட்டா தொடர்பாக அளித்த மனு – கை நகல் – பி.வா.சா.ஆ.12 ஆகவும், (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

13) 18.09.2017ம் தேதியிட்ட மாவட்ட வருவாய் அலுவலருக்கு, தவறாக வழுங்கப்பட்ட GR பட்டாவை ரத்து செய்ய கொடுக்கப்பட்ட மனு – கை நகல் – பி.வா.சா.ஆ.13 ஆகவும், (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

14) 05.12.2021ம் தேதியிட்ட நத்தம் வட்டாட்சியரிடம் பட்டா தொடர்பாக அளித்த மனு – கை நகல் – பி.வா.சா.ஆ.14 ஆகவும், (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

15) 29.05.2024ம் தேதியிட்ட நத்தம் காவல் நிலையத்தில் வாதி தரப்பு ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்த கொடுத்த புகார் மனு – கைநகல் – பி.வா.சா.ஆ.15 ஆகவும், (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

16) 06.06.2024ம் தேதியிட்ட திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு வாதி தரப்பு ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்த கொடுத்த புகார் மனு – கைநகல் மற்றும் இணையதள ஒப்புகை சான்று – பி.வா.சா.ஆ.16 ஆகவும், (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

மேற்படி பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மேலும் ஆவணம் குறியீடு செய்வதற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 13.12.2024 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.